©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 8.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 47] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 4, 2013
கார்த்திகை 18, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2013–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 1/2013.**

***1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச்சட்டம், 2013–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் (திருத்தம்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1978. 2. 1978–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 11–ஆம் பிரிவில், 3–ஆம் உட்பிரிவின் இரண்டாவது வரம்புரையில் "அறுபத்து ஐந்து ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "எழுபது ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2013–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 2/2013.**

**1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 49/1987.

15–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களின் நலநிதியச் சட்டத்தின் 15–ஆம் பிரிவில்,–

(1) (3)–ஆம் உட்பிரிவில் "இருநூறு ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "ஓர் ஆயிரம் ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (4)–ஆம் உட்பிரிவில்,

*(i)* (a) எனும் இனத்தில் "ஒருநூறு ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஐநூறு ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

*(ii)* (b) எனும் இனத்தில் "இருநூறு ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஓர் ஆயிரம் ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

*(iii)* (c) எனும் இனத்தில் "பத்தாயிரம் ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "இருபத்தைந்தாயிரம் ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

*(iv)* (d) எனும் இனத்தில் "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

16–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 16–ஆம் பிரிவில் (5) ஆம் உட்பிரிவில் மற்றும் அவற்றிற்கான வரம்புரையில் "இரண்டு இலட்சம் ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

23–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 23–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவில் "பத்து ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "முப்பது ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2013–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 3/2013.**

***தமிழ்நாடு மாநிலத்தில் பயிற்சியளிக்கப்பட்ட காவல் துறையினருக்கு ஒப்படைக்கப்பட்ட கீழ்மட்ட அளவிலான பணிகளைச் செய்வதற்கு தனிப்பட்ட சிறப்புக் காவல் இளைஞர் படை ஒன்றினை அமைப்பதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக்குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்தச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

*(a)* ''அரசு'' என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

*(b)* ''வகுத்துரைக்கப்பட்ட'' என்றால், விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

*(c)* ''இளைஞர் படை'' என்றால், 3–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட சிறப்புக் காவல் இளைஞர் படை என்று பொருள்படும்;

காவல் இளைஞர் படையை அமைத்தல்.

**3.** **(1)** மாநிலத்தில் தனிப்பட்ட காவல் இளைஞர் படை ஒன்று இருக்கும், அது தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்று அழைக்கப்பெறும்.

**(2)** இளைஞர் படையின் உறுப்பினர்களின் பணியின் வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் வகுத்துரைக்கப் படலாகிறவாறான முறையில் இருத்தல் வேண்டும்.

இளைஞர் படையின் செயற்பணிகள் மற்றும் கடமைகள்.

**4.** பின்வருபவை இளைஞர் படையின் செயற்பணிகளாக மற்றும் கடமைகளாக இருத்தல் வேண்டும்.

(a) காவல் துறையின் வாகனங்களை ஓட்டுதல் ;

(b) தபால் விநியோகம் மற்றும் கணினிப் பதிவுகளை மேற்கொள்ளுதல்;

(c) காவல் குடியிருப்புகளை பராமரித்தல் மற்றும்

(d) விபத்திற்குள்ளான நபர்களின் உயிரிழப்பை தடுப்பதில் காவல் படைக்கு உதவுதல்.

கட்டுப்பாடு மற்றும் பணிப்புரை.

**5.** **(1)** இளைஞர் படையின் பொதுக் கண்காணிப்பு, பணிப்புரை மற்றும் கட்டுப்பாடு அரசிடம் உற்றமைந்திருக்கும் மற்றும் அரசால் செயல்படுத்தப்படும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்கள் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு இளைஞர் படையினருக்கிடப்படும் கட்டளை மற்றும் மேற்பார்வை அரசால் அதிகாரமளிக்கப்படக்கூடிய அலுவலர் ஒருவரிடம் உற்றமைந்திருக்கும்.

**(2)** அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இச் சட்டத்தின்படி அவருடைய கடமைகளை நிறைவேற்றுகையில் அரசால் பணிக்கப்படலாகிறவாறான அத்தகைய பிற அலுவலர்கள் அவருக்கு உதவி செய்வார்கள்.

இளைஞர் படையின் உறுப்பினர்களின் தேர்வு.

**6.** **(1)** இளைஞர் படையின் உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில், 5–ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய தகுதிகளை பெற்றிருந்தாலன்றி நபர் எவரும், இளைஞர் படையின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்படுதலாகாது.

(3) இளைஞர் படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்பட்ட மதிப்பூதியம் பெறுவர்.

செயல் திறமுடைய பணிக்கான கடப்பாடு.

7. (1) இளைஞர் படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், தமிழ்நாடு மாநிலத்தில் எந்தப் பகுதியில் பணியாற்றுவதற்கும் கடப்பாடுடையவராக இருத்தல் வேண்டும்.

(2) இளைஞர் படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், விடுப்பில் அல்லது இடைநீக்கத்தில் இருந்தாலன்றி, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக எப்பொழுதும் செயல்திறமுடைய பணியில் மற்றும் எந்த நேரத்திலும் பணியில் அமர்த்தப்படுவர் அல்லது இச் சட்டத்தின்படி இளைஞர் படையின் கடமைகள் மற்றும் பொறுப்புகளுக்கு ஏற்ற வகையில் பணியில் அமர்த்தப்படும்போது அல்லது பல இடங்களுக்கு அனுப்பப்படும்போது, எந்த முறையிலும் உகந்த நிலையிலிருத்தல் வேண்டும்.

பயிற்சி.

8. (1) இளைஞர் படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான காலத்தில் அத்தகைய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

(2) பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் இளைஞர் படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், தமிழ்நாடு சீருடைப் பணிகள் தேர்வு வாரியத்தால் காவலர் பணியிடங்களுக்கென இளைஞர் படையின் உறுப்பினர்களுக்காக நடத்தப்பெறும் சிறப்புத் தேர்வை எழுதலாம்.

இடைநீக்கம் முடிவுறுத்தல் முதலியவை.

9. (1) இளைஞர் படையின் உறுப்பினர் எவரும் உரிய காரணமின்றி அவருடைய கடமையைச் செய்யத் தவறுதல் அல்லது மறுத்தல் அல்லது ஒழுக்கத்தை மீறும் செயல் எதனையும் செய்தல் அல்லது நடத்தை தவறுதல், தொடர்ந்து பணி செய்வதற்கு உடற்கூறின் அடிப்படையில் தகுதியில்லாதவராக இருத்தல், நல் ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடியவராக இருத்தல் அல்லது படையின் நலத்திற்கு அல்லது ஒழுக்கத்திற்கு அல்லது மாநிலத்தின் அல்லது அதனின் பகுதி எதனின் பாதுகாப்பிற்கும் குந்தகம் விளைவித்தல், போன்றவற்றிற்காக (5)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலரால் இடைநீக்கம் செய்யப்படலாம்.

(2) 5–ஆம் பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எழுத்து மூலமாக பொது நலன் கருதி இளைஞர் படையின் உறுப்பினர் எவரையும் பணியமர்த்தத்திலிருந்து நீக்கலாம்.

(3) இளைஞர் படையின் உறுப்பினரொருவர் 5–ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலருக்கு முகவரியிட்டு அவர் கைப்பட எழுதும் விண்ணப்பத்தின் அடிப்படையில் இளைஞர் படையிலிருந்து விலகலாம்.

மேல்முறையீடு

10. (1) 9–ஆம் பிரிவின், (2)–ஆம் உட்பிரிவின்படியான ஆணையொன்றினால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் படையின் உறுப்பினர் எவரும் அத்தகைய ஆணையிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல் முறையீடு செய்யலாம்.

(2) மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முடிவே இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்வி எதுவும் எழுப்பப்படுதல் ஆகாது.

இந்தச் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

11. இந்தச் சட்டத்திற்கிணங்க, நல்லெண்ணத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட எதற்காகவும் அல்லது செய்யக் கருதப்பட்ட அல்லது செய்ய வேண்டியதை விட்டுவிடுதல் போன்ற காரணங்களுக்காக இளைஞர் படையின் உறுப்பினர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு எதுவும் அல்லது பிற சட்ட நடவடிக்கை எவையும் தொடுக்கப்படுதலாகாது.

விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

12. (1) அரசானது இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாக முந்தைய அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றி அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எவற்றிற்கும் ஏற்படுத்தப்படலாம், அதாவது:-

*(a)* (3)–ஆம் பிரிவின்படி தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படையின் உறுப்பினர்களின் பணி வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள்,

*(b)* எந்த முறையில் இளைஞர் படையின் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

*(c)* இளைஞர் படையின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுப்பதற்கான தகுதிகள்;

*(d)* இளைஞர் படையின் உறுப்பினருக்கு கொடுக்கக்கூடிய மதிப்பூதியம்;

*(e)* 10–ஆம் பிரிவின்படி வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகார அமைப்பு;

*(f)* பயிற்சியின் பரப்பிடங்கள் மற்றும் அத்தகைய பயிற்சியின் கால அளவு;

*(g)* தேவைப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்;

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதலாகாது என சட்டமன்ற பேரவை முடிவு செய்யுமாயின் அதன் பின்பு அந்த விதி அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட பெயர் எதனின் செல்லுந்தன்மைக்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2013–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 4/2013.**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக: –

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2013 –ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) (a) 2013–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31–ஆம் நாளன்று 14–ஆம் மற்றும் 15–ஆம் பிரிவுகள் தவிர மற்ற அனைத்துப் பிரிவுகளும் நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 14 மற்றும் 15–ஆம் பிரிவுகள் 2013–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

முகப்புரையின் திருத்தம்.

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குரிய முகப்புரையில் (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) "என்பதாலும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக இது தமிழ்நாடு மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்களின் தன்னார்வ அமைப்பை, தன்னாட்சி செயல்பாட்டை, ஜனநாயகக் கட்டுப்பாட்டை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் தொழில் மேலாண்மையை முன்னேற்றுவதற்கு உகந்தது என்பதாலும்;

"மற்றும் என்பதாலும்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்,– (1) கூறு (1) என்பது கூறு (1– A) என்று மறு எண்ணாக ஆக்கப்படுதல் வேண்டும், மற்றும் கூறு (1–A) அவ்வாறாக மறு எண்ணிடப்படுவதற்கு முன்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும்: அதாவது :–

"*(i)*" செயலாட்சியர்" என்பவர் வாரியத்தின் இடத்தில் இந்தச் சட்டத்தின்படி அமர்த்துகை செய்யப்பட்ட உரிமையிலுள்ள அல்லது கூட்டுகுருமக் குழுமம் எதனின் பணியாளர் ஒருவர் அல்லது அரசால் கட்டுப்படுத்தப்படும் அரசு ஊழியர் ஒருவர் என்று பொருள்படும்;";

(2) (5)–ஆம் கூறில் "பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்று" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒரு மாநில அளவிலான பதிவு செய்யப்பட்ட சங்கம்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (7)–ஆம் கூறில் "ஒப்படைக்கப்பட்ட" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒப்படைப்பதற்கு" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (18)–ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

"(18) ‘‘அலுவலக நிர்வாகி’’ என்பவர் வாரியத்தின் தலைவர் ஒருவர் அல்லது துணைத் தலைவர் ஒருவர் என்று பொருள்படும் அவர் எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் தலைமையராக அல்லது துணைத் தலைமையராக மற்றும் விதிகளில் அல்லது துணை விதிகளில் குறிப்பிடப்படலாகிறவாறு பதிவு செய்யப்பட்ட சங்கம் எதனின் வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய பிற நபர் எவரையும் உள்ளடக்கும்’’;

(5) (22)–ஆம் கூறில் "சங்கம் ஒன்று என்பது" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒரு கூட்டுறவு சங்கம் என்பது" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 13–ஆம் பிரிவில்,-

1 (1)–ஆம் உட்பிரிவில் (d) கூறில் (ii) ஆம் உட்கூறில் "ஓர் ஆண்டு" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஆறு திங்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

2 (2)–ஆம் உட்பிரிவில் (d) கூறில் (ii) ஆம் உட்கூறில் "ஓர் ஆண்டு" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஆறு திங்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

5. முதன்மைச் சட்டத்தின் 20ஆம் பிரிவிற்குப் பின்பு, பின் வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

20–A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

"20–A. <u>கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி</u>.–

19–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட கூட்டுறவு ஒன்றியம் ஒவ்வொன்றும் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்களுக்கு கூட்டுறவுக் கல்வியை மற்றும் பயிற்சியை மேற்கொள்ளலாம் மற்றும் அதனுடைய வருடாந்திர வரவு–செலவுத் திட்டத்தில் நோக்கத்திற்காக தேவையான நிதிகள் ஒதுக்கப்படலாம்."

23–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 23–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (g) எனும் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

*(g)* விதிகளில் அல்லது துணை விதிகளில் வகுத்துரைக்கப்பட்ட சங்கத்தின் முதன்மை நோக்கத்திற்கு தொடர்பான தகுதியைப் பெற்றிருக்கவில்லையானால்; அல்லது

*(h)* அதனுடைய துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்த அளவு வரையிலாவது சங்கத்தின் பணிகள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லையானால் ; அல்லது

*(i)* சங்கத்தின் அடுத்தடுத்த மூன்று பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அவர் வராமல் இருப்பாரேயானால் .''

26–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 26–ஆம் பிரிவில் (4)–ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"(4) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் வாரியத்திற்கு அரசினால் நியமிக்கப்பட்டவர் அல்லது நிதி வங்கியால் நியமிக்கப்பட்டவர் அந்த வாரியத்தின் அத்தகைய உறுப்பினராக இருப்பவர் அவருடைய தகுதியில் பதிவு செய்யப்பட்ட சங்கம் எதிலும் நடைபெறும் தேர்தல் எதிலும் வாக்களிப்பதற்கோ, அல்லது போட்டியிடுவதற்கோ உரிமையுடையவராக இருக்கமாட்டார்.''

27–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 27–ஆம் பிரிவில் ''ஆய்வு'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் புத்தகங்களை, தகவலை நுழைந்து பார்க்கலாம் மற்றும்'' என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

32–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 32–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் ''ஒரு கூட்டுறவு ஆண்டில் நடைபெறுதல் வேண்டும்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''நிதி ஆண்டு முடிவடைவதிலிருந்து ஒரு ஆறு திங்கள் காலத்திற்குள் நடைபெறுதல் வேண்டும் '' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

33–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 33–ஆம் பிரிவில்,–

1 (1)–ஆம் உட்பிரிவில் ,–

(i) (a) கூறில் முதல் மற்றும் இரண்டாம் வரம்புரைகளுக்குப் பதிலாக பின்வரும் வரம்புரைகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"**வரம்புரை** : ஆனால் பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றின் வாரியத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய உறுப்பினர்கள் முப்பது விழுக்காடு பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மற்றும் பதினெட்டு விழுக்காடு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காகவும் மற்றும் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படும்:

**மேலும் வரம்புரை:** ஆனால் வாரியத்தின் உறுப்பினர்கள் வங்கி, மேலாண்மை, நிதி அல்லது வேளாண்மையில் சிறப்புத்தகுதி, பட்டுப் புழு வளர்ப்பு, பால்வளம்,

சந்தைப்படுத்துதல், சிறிய அல்லது குடிசை தொழில் துறையில் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நோக்கங்கள் அல்லது செயற்பாடுகளுக்குத் தொடர்புடைய துறை எதிலும் அனுபவம் கொண்டுள்ள இரண்டு நபர்களுக்கு மிகாதவர்களை சங்கத்தின் வாரியத்தின் உறுப்பினர்களாக சார்பாண்மை செய்யலாம்.

**அதற்கு மேலும் வரம்புரை:–** ஆனால் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் விதிகளில் அல்லது துணை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகிறவாறு மேலும் செயற்படும் இயக்குநர்களின் அத்தகைய எண்ணிக்கை ஒன்பது நபர்களுக்கு மிகாமல் வாரியத்தில் மேலும் அடங்கி இருக்கலாம்.

**விளக்கம் I.—** இந்த வரம்புரையின் நோக்கத்திற்காக (2)–ஆம் உட்பிரிவின் மற்றும் (c) கூறுக்காக "செயற்படும் இயக்குநர்" என்பவர் சங்கத்தின் செலுத்தப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது அரசுத் துறையின் அலுவலர் ஒருவர் அல்லது மைய அல்லது தலைமை சங்கத்தின் பிரதிநிதி அல்லது இந்திய சேம வங்கி அல்லது வேளாண்மைக்கான தேசிய வங்கி மற்றும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் செயற்பாட்டுடன் தொடர்புடைய ஊரக வளர்ச்சி போன்ற அத்தகைய பிற அமைப்புகள் என்று பொருள்படும்.

**விளக்கம் II.—** 1–ஆம் மற்றும் 2–ஆம் உட்பிரிவுகளின் நோக்கத்திற்காக பதினெட்டு விழுக்காடு அல்லது முப்பது விழுக்காடு ஒதுக்கீடு என்று கணக்கிடும்பொழுது கீழ்வாய் எண் பாதிக்குக் கீழே அது இருக்கிறதென்றால் அதனை பொருட்படுத்தாமல் விட்டு விடுதல் வேண்டும் அல்லது அது பாதிக்குச் சமமாக அல்லது பாதிக்கு மேல் இருந்தால் அருகிலுள்ள முழு எண்ணாக ஆக்கிவிடுதல் வேண்டும்:;

(ii) மூன்றாம் வரம்புரையில் "மற்றும் இரண்டாம் வரம்புரை" என்ற சொற்றொடர் விட்டு விடப்படுதல் வேண்டும்;

(iii) நான்காம் வரம்புரையில் ''ஓர் ஆண்டு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஆறு திங்கள்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(iv) கூறு (b) அதற்குரிய வரம்புரை உள்ளடங்கலாக விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (2)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது ;

"(2) (1)–ஆம் உட்பிரிவின் (a) எனும்கூறில் என்ன அடங்கியிருந்த போதிலும் ஆனால் (3) ஆம் உட்பிரிவிற்கு உட்பட்டு பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் என்கின்ற நேர்வில் வாரியமானது.–

*(a)* பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் அத்தகைய பகுதியிலிருந்து அல்லது அத்தகைய பிரிவிலிருந்து அல்லது வகையிலிருந்து வகுத்துரைக்கப்படலாகிறவாறு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் அத்தைகைய எண்ணிக்கை நூற்றுக்கு பதினெட்டு விழுக்காடு தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மற்றும் பழங்குடியினரின் உறுப்பினர்களிலிருந்தும் மற்றும் நூற்றுக்கு முப்பது விழுக்காடு (1)–ஆம் உட்பிரிவின் முதலாம் வரம்புரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளவாறு பெண்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

*(b)* வகுத்துரைக்கப்படலாகிறவாறு சார்பாண்மை உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை இரண்டுக்கு மிகாமல் ; மற்றும்

*(c)* விதிகளில் வகுத்துரைக்கப்படலாகிறவாறு செயற்படும் இயக்குநர்களின் அத்தகைய எண்ணிக்கை ஒன்பதற்கு மிகாமல்:

**வரம்புரை:** ஆனால் (a) கூறில் அடங்கியிருப்பது எதுவும் இணைப்பு பட்டியலிலுள்ள கூட்டுறவுச் சங்கம் எதனின் வாரியத்தில் அதன்படியும் எவருக்கும் செய்யப்பட்டிருக்கிற ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பெண் அல்லது உறுப்பினர்கள் அத்தகைய இணைப்புப் பட்டியலிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் வாரியத்திலுள்ள இடங்கள் எதற்கும் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து எவரையும் தடுப்பதாக கொள்ளப்படுதலாகாது.";

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது: –

(3) வாரியமானது.-

(a) தலைமைச் சங்கம் ஒன்று மற்றும் மையச் சங்கம் ஒன்று என்கின்ற நேர்வில் சங்கத்தின் விதிகளில் அல்லது துணைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகிறவாறு பதினொன்றுக்கு குறையாத மற்றும் இருபத்தியொன்று உறுப்பினர்களுக்கு மிகாமல் ; மற்றும்

(b) தொடக்க கூட்டுறவு சங்கமாக இருக்கின்ற நேர்வில் கூட்டுறவுச் சங்கத்தின் விதிகளில் அல்லது துணை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகிறவாறு ஏழுபேருக்கு குறையாத மற்றும் இருபத்தியொன்றுக்கு மிகாத உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.";

(4) (4)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"4 (a) (1)–ஆம் உட்பிரிவில் மற்றும் (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சார்பாண்மை உறுப்பினர்கள் மற்றும் செயற்படும் இயக்குனர்களின் எண்ணிக்கை (3)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை கணக்கிடும் நோக்கத்திற்காக சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கிவைத்தல் வேண்டும்;

(b) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும் சார்பாண்மை உறுப்பினர்கள் மற்றும் செயற்படும் இயக்குநர்கள் வாரியத்தின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு மற்றும் வாக்களிப்பதற்கு உரிமைபெற்று இருப்பர். ஆனால் அத்தகைய உறுப்பினர்களாக இருப்பவர்கள் அவர்களுடைய தகுதிகேற்ப பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் தேர்தல் எதிலும் வாக்களிப்பதற்கு அல்லது போட்டியிடுவதற்கு உரிமையுடைவர்களாக இருக்கமாட்டார்கள்.";

(5) (5)–ஆம் மற்றும் (6)–ஆம் உட்பிரிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(6) (7)–ஆம் உட்பிரிவில் மூன்று இடங்களில் வருகின்ற "மேலாண்மை இயக்குநர்" என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு "அல்லது தலைமை நிர்வாக அலுவலர்" என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்;

(7) 8–ஆம் உட்பிரிவில்,–

(i) ''உறுப்பினர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக '' செயற்படும் இயக்குநர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) இரண்டு இடங்களில் வருகின்ற ''உறுப்பினர்கள்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயற்படும் இயக்குநர்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(iii) மூன்றாம் வரம்புரை விட்டு விடப்படுதல் வேண்டும்;

(8) (9) –ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது : –

"(9) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் வாரியமொன்றிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அரசு ஊழியராகிய செயற்படும் இயக்குநர் ஒவ்வொருவரும் அத்தகைய தலைமைச் சங்கத்தின் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் தீர்மானம் எதுவும் தலைமைச் சங்கம் என்கின்ற நேர்வில் அரசுக்கும் மற்றும் பிற பதிவு செய்யபட்ட சங்கம் என்கின்ற நேர்வில் பதிவாளருக்கும் சுட்டியனுப்பலாம். நேர்விற்கேற்ப அது இந்தச் சட்டத்தின், சங்கத்தின் விதிகள் அல்லது துணைவிதிகளுக்கு இணங்காமல் இருந்தால் அல்லது அது அத்தகைய தலைமைச் சங்கத்தின் அல்லது பிற பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நலன்களுக்கு எதிராக இருந்தால் நேர்விற்கேற்ப அத்தகைய அறிக்கையினை பெறுவதன் அடிப்படையில் பதிவாளர் அல்லது அரசு நேர்விற்கேற்ப அவரால் அல்லது அவர்களால் தேவையெனத் தோன்றலாகிறவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்;

(9) (10)–ஆம் உட்பிரிவில் .–

(i) (a) கூறில் ''மூன்று ஆண்டுகள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐந்து ஆண்டுகள்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (aa) மற்றும் (aaa) கூறுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(iii) (b) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :

"(b) வாரியத்தின் சார்பாண்மை செய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்தகைய காலம்வரை அலுவலகத்தில் இருக்கலாம். அதற்காக வாரியத்தின் உறுப்பினர்கள் யார் அந்த உறுப்பினரை சார்பாண்மை செய்திருக்கிறரோஅவர் இருக்கும்வரை அலுவலகத்தில் இருப்பதற்கு உரிமை கொண்டிருப்பவராக இருப்பார்;

(iv) (c) கூறில் "புதிய நியமனத்தினால் நபர் அல்லது நபர்கள் எவரும் நியமனம் செய்யப்பெறும் மற்றும் காலியிடத்தை அல்லது காலியிடங்களை நிரப்புவதும்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "சார்பாண்மை உறுப்பினர் அல்லது செயற்படும் இயக்குநர் எவரும் அவருடைய அல்லது அவர்களுடைய செயல் சங்கத்தின் நலனுக்கு தீங்கு விளைவித்திருக்கிறது என்றால் மற்றும் காலியிடம் அல்லது காலியிடங்களை நிரப்புவது'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(10) (11)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது : –

"(11) (a)–இந்த சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்றின் வாரியத்திற்குரிய உறுப்பினர்களின் தேர்தல் வாரியத்தின் உறுப்பினர்களின் அலுவலகப் பதவிக்காலம்முடிவடைவதற்கு முன்பு நடத்தப்படுதல் வேண்டும் வாரியத்திலிருந்து வெளியேறும் உறுப்பினர்களின் அலுவலகப் பதவிக்காலம் முடிவடைவதன் அடிப்படையில் உடனடியாக புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியேற்றிருக்கிறார்களா என்பதனை நிச்சயித்தல் வேண்டும்.

(b) கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு அனைத்துத் தேர்தலுக்காக மற்றும் நடத்துவதற்கான வாக்காளர் பட்டியல்கள் தயார் செய்வதில் மேற்பார்வை, பணிப்புரை மற்றும் கட்டுப்பாடு 33–A பிரிவின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் ஆணையத்திடம் உற்றமைந்திருக்கும்.

(c) இந்த சட்டத்தில் அல்லது விதிகளில் பிறவாறாக வகை செய்யப்பட்டிருப்பது நீங்கலாக,–

(i) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் வாரியத்தின் உறுப்பினர் வகுத்துரைக்கப் படலாகின்றவாறான அத்தகைய முறையில் கமுக்கமான வாக்குச்சீட்டின் மூலம் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(ii) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அலுவலக நிர்வாகிகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் கமுக்கமான வாக்குச் சீட்டின் மூலம் அவர்களிலிருந்து வாரியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால் வாரியத்தின் உறுப்பினறொருவரின் அலுவலகத்திலுள்ள தற்செயலான காலியிடம் எதுவும் வாரியத்தின் மீதமுள்ள அலுவலகக் காலம் அதனுடைய உண்மையான காலம் பாதிக்குக் குறைவாக இருக்கிறதென்றால் தற்செயல் காலி இடம் விழுந்திருப்பது தொடர்பாக அதே பிரிவிலிருந்து வரும் உறுப்பினர்களை நியமனம் செய்வதன் மூலம் வாரியத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்;

**மேலும் வரம்புரை:** ஆனால் வாரியத்தின் மீதமுள்ள அலுவலகக் காலம் அதனுடைய உண்மையான காலம் பாதிக்குக் குறைவாக இல்லையென்றால் வாரியத்தின் உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்திலுள்ள தற்செயலான காலியிடம் எதுவும் வகுத்துரைக்கப்படலாகிறவாறானஅத்தகைய முறையில் தேர்தல் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்.'';

(11) (12)–ஆம் உட்பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(12) (13)–ஆம் உட்பிரிவுக்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"(13) வாரியத்தின் சாதாரண கூட்டங்கள் குறைந்தபட்சம் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது நடத்தப்படுதல் வேண்டும். அந்தக் கூட்டத்திற்கான அறிவிப்பு மூன்று இடையூறில்லாத நாட்களுக்குக் குறையாத அறிவிப்பு ஒன்றாக கொடுக்கப்படுதல் வேண்டும். மேலாண்மை இயக்குநர்அல்லது தலைமை நிர்வாக அலுவலர், தலைவர் அல்லது தலைமையருடன் கலந்தாலோசித்து மற்றும் அவருடைய வாராமையில்

துணைத்தலைவர் அல்லது துணைத் தலைமையர் நேர்விற்கேற்ப அத்தகைய வாரியத்தின்அல்லது மேலாண்மை இயக்குநர் அல்லது தலைமை நிர்வாக அலுவலர் அங்கே இல்லாமலிருக்கின்றவிடத்து அத்தகைய வாரியத்தின்தலைவர் அல்லது தலைமையர் அத்தகைய வாரியத்தின் கூட்டத்தினைக் கூட்டலாம்.'';

(13) (14)—ஆம் உட்பிரிவில்,—

(a) இரண்டு இடங்களில் வருகின்ற ''மேலாண்மை இயக்குநர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு ''அல்லது தலைமை நிர்வாக அலுவலர்'' என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்;

(b) இரண்டு இடங்களில் வருகின்ற "தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு "அல்லது தலைமையர்" என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்;

(c) "துணைத்தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு "அல்லது துணைத்தலைமையர்" என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(14) (15)—ஆம் உட்பிரிவில்,—

(a) "மேலாண்மை இயக்குநர்" என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு ''அல்லது தலைமை நிர்வாக அலுவலர்'' என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்;

(b) "தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு "அல்லது தலைமையர்" என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்;

(15) (16)—ஆம் மற்றும் (17)—ஆம் உட்பிரிவுகள் விட்டு விடப்படுதல் வேண்டும்.

48—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 48—ஆம் பிரிவில்,—

(1) (2)—ஆம் உட்பிரிவில், (a) கூறில், "வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "அத்தகைய குறைப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்கள் காலத்திற்குள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6)—ஆம் உட்பிரிவில்,—

(i) "ஐநூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்", என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) "ஐம்பது ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்கு பதிலாக "ஐநூறு ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (8)—ஆம் உட்பிரிவில், ''வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள்" என்கின்ற சொற்றொடருக்கு பதிலாக " பதினான்கு நாட்களாகிய ஒரு காலத்திற்குள் அதன் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள அத்தகைய குறைப்பு" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

80—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 80—ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(1) (a) பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் கணக்குகளை பராமரித்து வரலாம் மற்றும் அத்தகைய கணக்குகள் அரசு தணிக்கையாளர்களால் அல்லது தணிக்கை செய்யும் நிறுவகங்களால் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் ஒரு தடவையாவது அல்லது (e) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் அத்தகைய பிரிவு அல்லது பிரிவுகள் அல்லது வகை அல்லது வகைகளின் தொடர்பாக தணிக்கை செய்வதற்கு விழைதல் வேண்டும்;

(b) அரசின் தணிக்கையர்களின் அல்லது தணிக்கை செய்யும் நிறுவகங்களின் குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் அனுபவம் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்குகளை வகுத்துரைக்கப்படலாகிறவாறு தணிக்கை செய்வதற்கு தகுதியுடையதாக இருக்கும்;

(c) தணிக்கை செய்யும் நிறுவகங்களின் அமர்த்துகை என்கிற நேர்வில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் அத்தகைய பிரிவு அல்லது பிரிவுகள் அல்லது வகை அல்லது வகைகளின் பொதுக் குழு அரசால் ஒப்புதலளிக்கப்படும் தேர்ந்த பெயர்ப் பட்டியல் ஒன்றிலிருந்து தணிக்கை செய்யும் நிறுவகங்களைஅல்லது இது தொடர்பாக அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்பொன்றை அமர்த்துகை செய்யலாம்;

(d) பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைவதிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தணிக்கை முடிவதற்காகத் தேவைப்படும் நிதி விவரவுரைகளை மற்றும் பிற விபரங்களை தயார் செய்யலாம்;

(e) ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்குகள் அத்தகைய கணக்குகள் எதற்கு தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த நிதியாண்டு முடிவடைவதிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்;

(2) (3)–ஆம் உட்பிரிவில், "பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "அரசின் தணிக்கையர் அல்லது அமர்த்துகை செய்யப்பட்ட தணிக்கை செய்யும் நிறுவகங்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4)–ஆம் உட்பிரிவில் "பதிவாளராக அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர்", என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "அரசின் தணிக்கையர்களாக அல்லது (1) ஆம் உட்பிரிவின்படி அமர்த்துகை செய்யப்பட்ட தணிக்கை செய்யும் நிறுவகங்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (8)–ஆம் உட்பிரிவிற்கு பின்பு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– "(9) தலைமைச் சங்கமொன்றின் கணக்குகளின் தணிக்கை அறிக்கை வகுத்துரைக்கப்படலாகிறவாறானஅத்தகைய முறையில் மாநிலத்தின் சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டத்தின் 84–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

84A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

"84–A பதிவாளரிடம் விவர அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும். – பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் பின்வரும் பொருட்பாடுகள் உள்ளடங்கலாக பதிவாளரிடம் ஒவ்வொரு கூட்டுறவு ஆண்டு முடிவடைவதிலிருந்து ஆறு திங்களுக்குள் விவர அறிக்கையை தாக்கல் செய்யலாம், அதாவது:–

(a) அதனுடைய செயற்பாடுகளின் ஆண்டு அறிக்கை;

(b) அதனுடைய தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் விவர அறிக்கை;

(c) கூட்டுறவு சங்கத்தின் பொதுக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான மிகையாக உள்ளவற்றை தீர்வு செய்வதற்கான திட்டத்தை;

(d) கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதிகளுக்கு திருத்தங்களின் பட்டியல், எதுவுமிருக்கிறதென்றால்;

(e) அதனுடைய பொதுக்குழு கூட்டத்தினை நடத்தும் தேதி தொடர்பான விளம்புகை மற்றும் நடத்தப்பட வேண்டியதாயுள்ள தேர்தல்கள் நடத்தப்படாமலிருக்கும் பொழுது; மற்றும்

(f) இந்தச் சட்டம் அல்லது விதிகளின் வகையங்கள் எதற்கும் இணங்க பதிவாளருக்குத் தேவைப்படும் பிற தகவல் எதுவும்.".

14. முதன்மைச் சட்டத்தின் 88–ஆம் பிரிவில்,–

88–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"(1) பதிவு செய்யப்பட்ட சங்கம் எதுவும் வாரியமாக இருக்கின்றவிடத்து,–

(i) இந்தச் சட்டத்தின், விதிகள் அல்லது துணை விதிகளின் வகையங்களுக்கிணங்க சங்கத்தின் மேலாண்மை செய்யப்படும் அலுவற்பாடுகளில் தொடர்ந்து நடைபெறும்தவறுகையாக ஏற்படுகிறதென்றால்; அல்லது

(ii) அதனுடைய கடமைகளைச் செய்து முடிப்பதில் கவனமின்மை இருக்கின்றதென்றால்; அல்லது

(iii) சங்கத்தின் நலன்களுக்கு அல்லது அதனுடைய உறுப்பினர்களுக்கு குந்தகமான செயல் எதுவும் செய்யப்பட்டிருக்கிறதென்றால்; அல்லது

(iv) வாரியத்தை அமைப்பதில் அல்லது செயற்பணியில் இக்கட்டான சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கின்றதென்றால் ;

பதிவாளர், பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வாரியத்திற்கு அதனுடைய கூற்றுகளைக் கூறுவதற்காக வாய்ப்பொன்றினை அளித்த பிறகு, எழுத்து பூர்வமான ஆணையினால் வாரியத்தைக் கலைத்துக் கைக்கொள்ளலாம் மற்றும் ஆறுமாதங்களுக்கு மிகாமல் குறிப்பிடப்பட்டுள்ள காலமொன்றிற்காக சங்கத்தின் அலுவற்பாடுகளை மேலாண்மை செய்வதற்கு (இதன் பின்பு செயலாட்சியராக குறிப்பிடப்படுவதான) அரசு ஊழியர் ஒருவரை அல்லது அரசால் உரிமையுடைய அல்லது கட்டுப்படுத்தப்படும் கூட்டுருமக் குழுமம் எதனின் பணியாளர் ஒருவரையும் அமர்த்துகை செய்யலாம்.

**வரம்புரை:** ஆனால் இந்த உட்பிரிவின்படியான ஆணையொன்று கலைத்துக் கைக்கொள்ளுதல் அறிவிப்பு வழங்கப்படும் தேதியிலிருந்து ஒரு இரண்டு திங்களுக்குள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**மேலும் வரம்புரை:** ஆனால் பதிவு செய்யப்பட்ட அத்தகைய சங்கம் எதனின் வாரியம் அரசு பங்கு அல்லது கடன் அல்லது நிதி உதவி அல்லது அரசால் அளிக்கப்படும் உத்தரவாதம் எதுவும் இல்லாமலிருக்கின்ற விடத்து கலைத்துக் கைக்கொள்ளப்படுதலாகாது:

**அதற்கு மேலும் வரம்புரை:** பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்று வங்கி அலுவல்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் நேர்வில் 1949—ஆம் வங்கி ஒழுங்கு முறைப்படுத்துதல் சட்டத்தின் வகையங்கள் மேலும் பொருந்தக் கூடியதாக இருக்கலாம்; மையச் சட்டம் X/1949.

**அதற்கு மேலும் வரம்புரை:** ஆனால் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று வங்கிஅலுவல்களை செய்து கொண்டிருக்கும் நேர்வில், இந்த உட்பிரிவின் வகையங்கள் ''ஆறு திங்கள்'' என்கின்ற சொற்களுக்குப் பதிலாக ''ஓர் ஆண்டு'' என்ற சொற்கள் அமைக்கப்பட்டிருந்திருந்தாற் போன்று செல்திறம் பெற்றிருக்கும்.'';

(2) (2) —ஆம் உட்பிரிவில்,—

(a) "ஒரு தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக" ஒரு செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)—ஆம் உட்பிரிவில், "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (4)—ஆம் உட்பிரிவில், "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (5)—ஆம் உட்பிரிவில், "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''செயலாட்சியர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (8)—ஆம் உட்பிரிவில், "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

89—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 89—ஆம் பிரிவில்,—

(1) ஓரத் தலைப்பில், "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)—ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1) எங்கெல்லாம்,—

(i) இந்தச் சட்டம் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்கீழ் அதனால் அமர்த்துகை செய்யப்பட்ட தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் ஆணையம், அல்லது அலுவலர் எவரும் இந்தச் சட்டத்தின் வகையங்கள் மற்றும் விதிகளுக்கிணங்க தேர்தல்களை நடத்துவதற்கு தவறியிருக்கின்றவிடத்து; அல்லது

(ii) புதியதாக அமைக்கப்பட்ட வாரியம் முன்பிருந்த வாரியத்தின் அலுவலகக்காலம் முடிவடைவதன் அடிப்படையில் அலுவலகத்திற்குள் நுழைவதற்கு தவறியிருக்கிறது, அல்லது நுழைந்து கொண்டிருப்பதிலிருந்து தடுக்கப்படுகின்றவிடத்து ;

பதிவாளர், அவருடைய சொந்த ஆற்றலில் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் உறுப்பினர் எவரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் மற்றும் புதிய வாரியம் என்கின்ற நேர்வில் அலுவலகத்தில் நுழைவதற்கு தவறியிருக்கிறது அல்லது அலுவலகத்திற்குள் செல்ல தடுக்கப்பட்டிருக்கிறதென்றால் மேற்சொன்ன வாரியத்தின் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய கூற்றுகளைக் கூற வாய்ப்பொன்றினை அளித்த பின்பு புதிய வாரியமொன்று அமைக்கப்படுவது நிலுவையிலிருக்கும்போது அல்லது புதிய வாரியமானது அலுவலகத்திற்குள் நுழையும்வரை நேர்விற்கேற்ப ஆறு திங்களுக்கு மிகாத ஒரு குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்காக (இதன் பின்பு "செயலாட்சியர்" என்று குறிப்பிடப்படுவதான) அரசால் உரிமை கொண்டுள்ள அல்லது கட்டுப்படுத்தப்படும் அரசு ஊழியர் ஒருவர் அல்லது கூட்டுருமக் குழுமம் எதனின் பணியாளர் ஒருவர் ஆணையினால் அமர்த்துகை செய்யப்படலாம்.";

(3) (2)–ஆம் உட்பிரிவில் இரண்டு இடங்களில் வருகின்ற ‘‘ஒரு தனி அலுவலர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒரு செயலாட்சியர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**16.** முதன்மைச் சட்டத்தின் 91–ஆம் பிரிவில் "ஐந்து ஆண்டுகள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக" ஓர் ஆண்டு" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 91–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

17. முதன்மைச் சட்டத்தின் 136 D எனும் பிரிவில்,– 136–D-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) 12–ஆம் உட்பிரிவில் கூறு (b) விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (13)–ஆம் உட்பிரிவில் கூறுகள் (a) மற்றும் (b) அதற்குரிய வரம்புரை உள்ளடங்களாக விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (17) ஆம் உட்பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

18. முதன்மைச் சட்டத்தின் 157–ஆம் பிரிவில்,– 157–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1)–ஆம் உட்பிரிவில் ‘‘ஐநூறு ரூபாய்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஐயாயிரம் ரூபாய்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2)–ஆம் உட்பிரிவில் "ஐநூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**19.** முதன்மைச் சட்டத்தின் 158–ஆம் பிரிவில் "ஐநூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 158–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

20. முதன்மைச் சட்டத்தின் 159–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில்,– 159–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) "இரு நூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) "ஐம்பது ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐநூறு ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

21. முதன்மைச் சட்டத்தின் 160–ஆம் பிரிவில்,– 160–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (a) கூறில், "ஐநூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) கூறில், "ஐநூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

161—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

22. முதன்மைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவில்,-

(1) (1) ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1) அலுவலர் எவரும் அல்லது அவரிடம் உள்ள பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களை, கணக்குகளை, ஆவணங்களை, பதிவுறுக்களை, ரொக்கத்தினை, பிணையத்தை அல்லது பிற சொத்தினை அச்சங்கத்தில் இருக்கின்ற அலுவலர் ஒருவர்அல்லது வைத்திருக்கும்நபர் அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவரிடம் அவர் வேண்டுமென்றே அவற்றை ஒப்படைக்க தவறுகிறாரென்றால் அவர் ஓர் ஆண்டுவரை நீட்டிக்கப்படலாகும் காலவரைக்கான சிறை தண்டனையுடன்அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் தண்டத்துடன் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கத் தக்கவராதல் வேண்டும்.";

(2) (2)—ஆம் உட்பிரிவில்,—

(a) "தனி அலுவலர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''செயலாட்சியர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) "இரண்டாயிரம் ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) "ஒரு நூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐநூறு ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

162—எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

23. முதன்மைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும்பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"162. <u>வாரியத்தின் உறுப்பினர்களின் அல்லது வாரியத்தின் அலுவலக நிர்வாகிகளின் தேர்தல்களில் ஒழுங்கீனமான வழக்கத்தை மேற்கொள்வதற்கான தண்டனை</u>:— நபர் எவரும், வாரியத்தின் உறுப்பினர்களின் அல்லது வாரியத்தின் அலுவலக நிர்வாகிகளின் தேர்தலுக்கு முன்பு, தேர்தலின் போது அல்லது தேர்தலுக்குப் பிறகு,—

(a) பெயர் குறித்து தாக்கல் செய்யும்தாள் எதனையும் மோசடியாக உருகெடும்படி செய்யப்படுகிறது அல்லது மோசடியாக அழிக்கப்படுகிறது; அல்லது

(b) அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவரின் அதிகார அமைப்பின்படி அல்லது அதனால் ஒட்டப்பட்டுள்ள பட்டியல், அறிவிப்பு அல்லது பிற ஆவணம் மோசடியாக உருகெடுக்கப்படுகிறது, அழிக்கப்படுகிறது அல்லது நீக்கப்படுகிறதென்றால்; அல்லது

(c) வாக்குச் சீட்டு அல்லது வாக்குச்சீட்டு எதனின் மீதமுள்ள அலுவலகக் குறியீடு அல்லது அடையாளத்தின் விளம்புகை எதனையும் மோசடியாக உருக்கெடுக்கிறார் அல்லது மோசடியாக அழிக்கின்றார் ; அல்லது

(d) உரிய அதிகார அமைப்பின் அனுமதியின்றி வாக்குச்சீட்டு எதனையும் நபர் எவருக்கும் வழங்குகிறார் அல்லது நபர் எவரிடமிருந்தும் வாக்குச் சீட்டினை பெறுகிறார் அல்லது வாக்குச் சீட்டு எதனையும் தன்னகத்தே கொண்டுள்ளார் என்றால் ; அல்லது

(e) சட்டத்தின் மூலம் போடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டினை தவிர அவர் வாக்குப் பெட்டிக்குள் மோசடியாக பிற எதனையும் போடுகிறார் என்றால்; அல்லது

(f) தேர்தல்கள் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வாக்குப் பெட்டியை அல்லது வாக்குச் சீட்டுகளை உரிய அதிகார அமைப்பின் அனுமதியின்றி அழிக்கிறார், எடுத்துக்கொள்கிறார், திறக்கிறார் அல்லது மற்றபடி இடையூறு செய்கிறார் என்றால்; அல்லது

(g) மோசடியாக அல்லது உரிய அதிகார அமைப்பின் அனுமதியின்றி நேர்விற்கேற்ப முந்தைய செயல்கள் எதனையும் செய்வதற்கு முயற்சி செய்கிறார் அல்லது வேண்டுமென்றே உதவுகிறார் அல்லது அத்தகைய செயல்களை எதனையும் செய்வதற்குத் தூண்டுகிறார் என்றால்; மற்றும்

(h) கொடை எதனையும் கோரிப் பெறுகிறார் அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக நபர் எவருக்கும் கைமாறாக எதனையும் செய்கிறேன் என்ற குறிக்கோளுடன் உதவ முன்வருகிறாறென்றால், –

(i) நபர் ஒருவர் தேர்தல் ஒன்றில் வேட்பாளராக இருப்பவர் நிற்பதற்கு அல்லது நிற்காமல் இருப்பதற்கு, அல்லது திரும்பப் பெறுவதற்கு அல்லது அதிலிருந்து திரும்பப் பெறாமலிருப்பதற்கு; அல்லது

(ii) உறுப்பினர் ஒருவர் தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கு அல்லது அவ்வாறு நின்றிருக்கும்போது அல்லது நிற்காமல் இருக்கும்போது அல்லது திரும்பப் பெற்றிருப்பதற்காக அல்லது அவருடைய அபேட்சித்தலை திரும்பப் பெறாமல் இருக்கும்போது நபர் ஒருவருக்கு வெகுமானமாக அளிக்கின்றவிடத்து; அல்லது

(iii) உறுப்பினர் ஒருவர் வாக்களித்திருப்பதற்காக அல்லது வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதற்காக, உள்ளடங்கலானவற்றிற்கு.

ஓர் ஆண்டு வரை நீட்டிக்கப்படலாகும், ஒரு காலவரைக்கான சிறை தண்டனையுடன் அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் தண்டத்துடன் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கத்தக்கவராக இருப்பார்.''.

**24.** முதன்மைச் சட்டத்தின் 163–ஆம் பிரிவில், "ஐம்பது ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 163–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**25.** முதன்மைச் சட்டத்தின் 165–ஆம் பிரிவில்,– 165–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(a) "ஒரு தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு செயலாட்சியர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) மூன்று இடங்களில் வருகின்ற "தனி அலுவலர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "செயலாட்சியர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**26.** முதன்மைச் சட்டத்தின் 169–ஆம் பிரிவின் "33–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (b) கூறு அல்லது அதனின் (8)–ஆம் உட்பிரிவு" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக " 33–ஆம் பிரிவின் (8)–ஆம் உட்பிரிவு" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 169–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**27.** முதன்மைச் சட்டத்தின் 170–ஆம் பிரிவில் ''கூறு (b) யின்'' என்கின்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும். 170–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2013. **28.** (1) 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஆறாம் திருத்த) அவசரச் சட்டம் இதன் மூலம் நீக்கறவு செய்யப்பட்டது. நீக்கமும் காப்பும்.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்த சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.